[3rd April 1965

கனம் திரு. செ. ம. அ. மஜீத்: ஆவடி, அம்பத்தூர், மாதவரம் பால்பண்ணை காலனி ஆகிய ஊர்களைச் சிறு நகரங்களாக்குவது பற்றிப் பரிசீலனை செய்யப்படுகிறது.

கத்திவாக்கம் (எண்ணூர்) என்ற ஊரைச் சிறு நகரமாக்கும் திட்டம் கைவிடப்பட்டது.

பொன்பரப்பிப் பகுதிக்கான குடி நீர் வழங்கும் திட்டம்

*** 442 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் தல நிர்வாக** அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், பொன்பரப்பிப் பகுதிக்கான குடிநீர்த் திட்டத்தை வரும் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ள உத்தேசமுண்டா?

கனம் திரு. செ. ம. அ. மஜீத்: திருச்சிராப்பள்ளி மாவட்டத்தினைச் சார்ந்த செந்துறை பஞ்சாயத்து யூனியனிலுள்ள பொன்பரப்பி கிராமம் தண்ணீர்ப் பஞ்சப் பகுதியாக வகைப்படுத்தப்பட்டு, முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கத்திடமிருந்து தொழில் நுட்ப அனுமதி பெறுவதற்காகத் தோராயமாக ரூபாய் 1,70,000 செலவில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்திய அரசாங்க சுகாதாரத் துறை அமைச்சகம் இத்திட்டத்திற்குத் தேவைப்படும் முக்கிய நிதிகளை வழங்கும்போது, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத் திட்டத்தை மேற்கொள்வதுபற்றி ஆலோசிக்கப்படும்.

செங்கம் நகர ஆஸ்பத்திரிக்கான கட்டிடங்கள்

*** 443 கேள்வி.— திரு. ஏ. ஆறுமுகம்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா செங்கம் நகரத்தில் புதிதாக ஆஸ்பத்திரிக் கட்டிடம் கட்டும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் என்றால் அத்திட்டம் எந்நிலையிலுள்ளது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ): செங்கம், அரசாங்க மருத்துவமனைக்காகப் புதிய கட்டிடங்கள் கட்டும் திட்டம், இப்போதைக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

கரம்பக்குடி மருத்துவ மனை

*** 444 கேள்வி.—திரு. பி. முருகையன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரம்பக்குடியில் மருத்துவ விடுதி ஒன்று கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா?

(இ) மாவட்ட தலைமை மருத்துவரிடமிருந்து இது குறித்துப் பரிந்துரைக் கடிதங்கள் வந்தனவா? அவை யாவை?